**தலைப்பு 160 – மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஆம் ஆண்டு**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்த) சட்டத்தினால் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது அட்டவணையிலும் மூன்றாவது அட்டவணையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்புக்கள் மற்றும் விடய இலக்கம் என்பவற்றின் கீழ் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று, மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலிருந்தும் இணக்கக் கூற்றுக்களில் இருந்தும் நிரூபணமாகும் நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

## 1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களித்தன்மை தொடர்பான பொறுப்பு

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளின் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரமும் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமான கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியினால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தினால் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.3 கணக்காய்வு நோக்கெல்லை

---

தலைப்பு 160 – மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு உரிய தரப்பினருக்கு செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 ஜூலை 20 ஆந் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் அறிக்கைகள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.17 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மையினை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசின் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 127 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றும் போது கண்டறியப்பட்ட பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்பட பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிதன்மையை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

| நிதிப் பிரமாணம் | **நிதிப்பிரமாணம் 127(1) பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களித்தன்மை** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் அந்த ஏற்பாடுகளுடன் இணங்காதிருந்தமை** | **அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு** |
|---|---|---|---|
| 127(1)(அ) | பிழையின்றி மற்றும் நிதி முறைசார் விதத்துடன் செயற்பட்டுவதென உறுதிப்படும் வகையில் அனைத்து நிதி விடயங்களும் திட்டமிடப்படல். | செயல் நடவடிக்கைத் திட்டம் உரிய முறையில் தயாரித்திருக்கவில்லை. | 2.1<br>2.2 |
| 127(1)(ஆ) | செலவினம் மற்றும் அரச வருமான சேகரிப்பு தொடர்பாக போதியளவு கட்டுப்பாட்டிற்கு ஏற்பாடுகள் தயாரிக்கும் முறைமை ஒன்று தயாரித்து கொள்ளல். | 1. சொத்துக்கள் முகாமைத்துக் குறைபாடுகள்<br>2. இணங்காமைகள் | 2.6<br>2.14 |

| | | | |
|---|---|---|---|
| 127(2) | தனது கட்டுப்பாட்டின் கீழ் காணப்படும் திணைக்களங் களில் அப்போதைக்கு காணப்படும் செலவு விடயங்களை போலவே புதிதாக அல்லது மிகையாக செலவிடுவதற்கான பிரேரணை கள் சிக்கன தன்மை மற்றும் வினைத்திறமை விடயத்தில் அமைச்சில் கூர்மையான பரிசோதனை மேற்கொள்ளல். | 1. வெளிநாட்டுதவி செயற்திட்டங்களின் செயலாற்றுகை நிறைவேற்றப்படாமை.<br>2. உள்ளகக் கணக்காய்வு<br>3. வெளிசாராருக்கு கொடுத்துள்ள சொத்துக்கள் | 2.4.2<br>2.15<br>2.6(இ) |
| 127(3) | தனது நிருவாகம் சார் அனுபவத்தை மற்றும் விமர்ச்சிக்கும் யுத்தியை நெறியிருந்த பொருத்தமான விதத்தில் செயற்படுவதற்காக சந்தேகமொன்று ஏற்பட்டுள்ள அனைமத்து கேள்விகளும் தனக்கு சமர்ப்பிக்கப்படும் முறையொன்றினை ஏற்படுத்தி யிருத்தல். | 1. விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன் படுத்தப்படும் சொத்து க்கள் காணப்படல்.<br>2. ஏனைய நிறுவனங் களுக்கு சொந்தமான சொத்துக்களை முறைசாராத விதத்தில் பரிமாறுதல். | 2.6(ஆ)<br>2.6(ஈ) |
| 127(4) | தமது ஒவ்வொரு கணக்கீட்டு உத்தியோகத்தரினாலும் ஒதுக்கீட்டுக் கணக்குகள் முறைப் பிரகாரம் சமர்ப்பிக் கப்படுகின்றன எனவும் மற்றும் தான் அவற்றில் கையொப்ப மிடுவதற்கு முன்னர் அமைச்சி னால் பரிசோதனை செய்யப் படுவதாகவும், அதே போல் மதிப்பீடுகளில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள தொகை மற்றும் உள்ளவாறான செலவுகளிடையே காணப் படும் பொருண்மையான வித்தியாசங்களை தானே கடுமையான விசாரணைக்கு ஆளாக்குதல். | 1. வருடாந்த பாதீட்டு வரையறையை மிகை த்து ஈடுபாட்டு பொறுப்புகளுக்கு நெருங்குதல்.<br>2. கட்டுநிதி கணக்கில் குறைபாடுகள்<br>3. பொது வைப்புக் கணக்குகளில் குறைபாடுகள் | 2.7<br>2.11<br>2.12 |
| 127(5) | திணைக்களத்தின் மதிப்பீடு களில் ஒதுக்கீடு செய்யப்பட் டுள்ள தொகை மற்றும் செலவுகளிடையே காணப் படும் கணிசமான வித்தியாச ங்கள் கடுமையாக பரிசோத னைக்கு ஆளாக்கப்படு வதாகவும் | ஒதுக்கியிருந்த ஏற்பாடுகளை பயன்படுத்தாமை | 2.10(அ)(ஆ) |

| | | | |
|---|---|---|---|
| 127(7) | உத்தியோகத்தர்களின்/ ஊழியர்களின் தாமதம், கவனயீனம், குற்றம் அல்லது மோசடியின் காரணத்தினால் அரசுக்கு நட்டங்கள் ஏற்பட்டுள்ள சந்தர்ப்பங்களில் நிதிப் பிரமாணம் 103 முதல் 108 வரை பிரமாணங்களில் விதித்துள்ள செயற்பாட்டு முறைமைகள் கணக்கீட்டு உத்தியோகத்தர்களினால் கடைபிடிக்கப்படுகிறது எனவும், நிதிப் பிரமாணம் 156(1) இன் பிரகாரம் அந்த நட்டங்கள் தொடர்பாக பொறுப்பு சொல்ல வேண்டிய உத்தியோகத்தர்கள்/ ஊழிய ர்கள் மீது மிகைவிதிப்பு விதிப்பதும், பொறுப்பு ஏற்பதற்கு ஏற்பாடுகள் செய்ய ப்பட்டிருப்பின் தனக்கு சாட்டப்பட்டுள்ள பொறுப்பு க்களில் இருந்து கணக்கீட்டு உத்தியோகத்தர் விடுவிக்க ப்பட்டுள்ளார் என கணிக்கப் படுகின்றது. அரச கணக்கு குழுவின் முன் சென்று தான் பொறுப்பு சொல்லும் திணைக் களங்களில் கணக்குகளுக்கு விளக்கமளித்தும் நியாயப் படுத்தியும் கணக்கீட்டு உத்தி யோகத்தருக்கு உதவுதல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கடமைப் பொறுப்பாக இருத்தல். | பணம் தொடர்பாக செயற்படும் உத்தியோ கத்தர்களிடம் பிணை வைப்பு பெற்றுக் கொள்ளாமை. | 2.17 |

## 2. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 செயலாற்றுகை

**திட்டமிடல்**

2014 பெப்ரவரி 17 திகதிய 01/2014 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2017 ஆண்டிற்காக செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் போது அமைச்சினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த முக்கிய கடமைகள் 15 காணப்பட்டதுடன், அமைச்சின் கீழ் நிறுவப்பட்டுள்ள 11 நியதிச் சட்ட நிறுவனங்களின், 02 திணைக்களங்களின், 22 வெளிநாட்டு செயற்திட்டங்களின் மற்றும் 12 உள்நாட்டு செயற்திட்டங்களின் எதிர்பார்த்த விளைவுகளைப் பெற்றுக்கொள்வதற்காக செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டிற்காக நாளது வரை ஆக்கப்பட்ட செயல் நடவடிக்கை திட்டத்தில் நிறுவனத்தின் அமைப்பு கட்டமைப்பு, அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் தற்போது சேவையிலுள்ள பதவியணியினர் தொடர்பான விபரங்கள் சமர்ப்பிக்கப்படவில்லை.

### 2.2 கடமைகளை நிறைவேற்றாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் ஒவ்வொரு செயற்பாடுகளும் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கருமங்களின் பிரகாரம் செயலாற்றுகை அறிக்கை தயாரித்திருக்காமையால் நெருங்க வேண்டிய இலக்குகள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றனவா என உறுதிப்படுத்த முடியவில்லை.

(ஆ) புதிதாக வளர்ந்து வரும் உயிரினங்களின் உள்வருதல் மற்றும் பரவுதலை கட்டுப்படுத்துவதற்காக கொள்திறன் அபிவிருத்தி செய்திட்டத்துடன் தொடர்புடைய பௌதீக முன்னேற்றம் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் நிதி முன்னேற்றம் தொடர்பாக குறிப்பிட்டிருக்கவில்லை.

### 2.3 வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

2002 செப்டம்பர் 12 ஆம் திகதிய 402 ஆம் இலக்க பொது நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் அமைச்சினால் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுள் மீளாய்வாண்டிற்காக செயலாற்றுகை அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனினும், அவ் அறிக்கை 2018 மே 31 திகதி அளவிலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்திருக்கவில்லை.

### 2.4 செயற்படுத்தியிருந்த உள்நாட்டு செயற்திட்டங்கள்

#### 2.4.1 உள்நாட்டு செயற்திட்டங்கள்

மீளாய்வாண்டின் போது அமைச்சினால் உள்நாட்டு நிதியத்தை பயன்படுத்தி செயற்படுத்தப்படும் 12 செயற்திட்டங்களுக்காக கூட்டுத்தொகை ரூபா 24,093.5 மில்லியன் தொகை நிதி ஏற்பாடுகளும் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அவற்றில் ரூபா 21,510.22 மில்லியன் தொகை பயன்படுத்தியிருக்கவில்லை. அதன் பிரகாரம் ரூபா 2,582.28 மில்லியன் தொகை எனப்படும் ஒதுக்கப்பட்டிருந்த ஏற்பாடுகளில் 10.72 சதவீத நிதி ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தது.

## 2.4.2 வெளிநாட்டு தவிச் செயற்திட்டங்கள்

---

**வெளிநாட்டு தவிச் செயற்திட்டங்களின் செயலாற்றுகை**

---

மீளாய்வாண்டின் போது அமைச்சினால் வெளிநாட்டு நிதியளிப்புக்களின் கீழ் 22 செயற்திட்டங்கள் செயற்படுத்தியிருந்தது. செயற்திட்டத்தின் பிரகாரம் அவற்றின் மதிப்பிடப்பட்ட கிரயங்களின் கூட்டுத்தொகை ரூபா 24,573.03 மில்லியன் ஆக காணப்பட்டதுடன் செயற்திட்டத்திற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 16,008.44 மில்லியன் தொகை பயன்படுத்தியிருந்தது. அந்த வெளிநாட்டுதவி செயற்திட்டங்கள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) இலங்கையில் மஹாவலி கங்கை வடிநிலத்தை அண்மித்த விவசாய குடியேற்றங்களில் விவசாயிகளை காலநிலை மாற்றங்களின் பிரதிகூலமான தாக்கங்களுக்கு இசைவாக்கும் செயற்திட்டம்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அமைச்சு மற்றும் உலக உணவுத் திட்டம் இடையே இச் செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்காக 2014 ஆகஸ்ட் 11 திகதி மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டக் காலம் 03 வருடங்களாகும். எனினும், அவற்றின் செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்காமையால் 2018 ஆகஸ்ட் வரையும் காலநீடிப்பு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறாயினும் 03 வருடங்கள் முடிவடைந்திருந்த கணிசமான மட்டதில் பௌதீக முன்னேற்றம் ஒன்றினை நெருங்கியிருக்கவில்லை.

(ii) 2017 ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்திலுள்ள ரூபா 194 மில்லியனிற்கான 62 செயற்பாடுகள் மீளாய்வாண்டின் போது நிறைவேற்றியிருக்கவில்லை.

(iii) மீளாய்வாண்டின் போது செயற்திட்டத்தின் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக திறைசேரியினால் வழங்கியிருந்த கட்டுநிதிகள் ரூபா 44,724,708 இற்கான தொகையினை பயன்படுத்தியிருக்கவில்லை.

(iv) மீளாய்வாண்டின் போது செயற்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்தத் தேறிய ஏற்பாடுகளாகி ரூபா 463,747,520 இனால் ரூபா 312,776,228 தொகை மீதியாகவுள்ளது. இதன் பிரகாரம் தேறிய ஏற்பாடுகளில் 67 சதவீதம் மீதியாகும்.

(ஆ) ஓஸோன் செயற்திட்டத்தினால் மீளாய்வாண்டின் போது ரூபா 247,150 இற்கான ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு செய்திருந்த போதிலும் கணக்காய்விற்கு சமர்ப்பித்திருந்த இறுதி நிதிக் கூற்றுக்களுடன் கணக்குகளில் நிலையான சொத்துக்களின் அசைவு அறிக்கை ஒன்று சமர்ப்பித்திருக்கவில்லை.

**(இ) சுற்றாடல் முறைமை பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவச் செயற்திட்டம்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) செயற்திட்ட மதிப்பாய்வு அறிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் காலஎல்லை 2016 ஜூலை 01 திகதி முதல் 2021 ஜூன் 30 திகதி வரை ஆக காணப்பட்டதுடன் செயற்திட்டத்தில் அலுவல்கள் 2016 ஜூலை 26 திகதி முதல் செல்லுபடியாகும் விதத்தில் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும், செயற்திட்டத்தின் அலுவல்கள் 2016 திசெம்பர் 01 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

(ii) 2016 மார்ச் 12 ஆம் திகதி கிடைத்திருந்த அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் 2017 ஆண்டு முதல் தொடர்ந்து செயற்திட்டத்திற்காக தேவையான ஏற்பாடுகள் வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் பூர்த்தி செய்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2017 ஆண்டிற்கான ஏற்பாடுகள் பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் ஒதுக்கப்பட்டிருக்காததுடன் நிதிப்பிரமாணம் 66 மாற்றங்களின் மூலம் ஏற்பாடுகள் பெறப்பட்டிருந்தன.

(iii) செயற்திட்டத்தின் ஆரம்பத்திலேயே மொத்த செயற்திட்ட காலப்பகுதிக்காக செயல் நடவடிக்கை திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டுமெனவும், அது 2018 ஆண்டிலேயே தயாரிக்கப்பட்டிருந்தது.

(iv) 2017 ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் திருத்தப்பட்டிருந்ததுடன் அந்த செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு நேரொப்ப முன்னேற்ற அறிக்கையெனர்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்காமையால் செயற்திட்டத்தின் 2017 ஆண்டிற்கான செயற்பாடுகளை நிறைவேற்றல் தொடர்பாக தகவல்கள் கணக்காய்விற்கு உறுதிப்படுத்திக் கொள்வதற்கு முடியவில்லை.

(ஈ) 2016 ஆண்டில் முடிவடைய வேண்டியிருந்த நீண்டகாலம் காணப்படும் காபனிக் மாசடையக் கூடியவை (PoPs) தொடர்பாக ஸ்டொக்ஹோல் உடன்படிக்கையின் தேசிய செயல் நடவடிக்கைத் திட்டம் (NIP) மற்றும் அது தொடர்பாக தயாரிக்கப்பட்டிருந்த ஏனைய அறிக்கைகளின் அச்சிடும் வேலைகள் பூர்த்தி செய்திருக்கவில்லை. அவ்வாறாயினும், மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு அச்சிடுவதற்கான மாதிரிகளின் பிரகாரம் அறிக்கைகள் அச்சிடப்பட்டுள்ளன என உறுதிப்படுத்தப்படாமல் ரூபா 1,266,100 இற்கான கொடுப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) 2017 ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் இலங்கையின் பொலிக்லோரினேடட் பைபினயில் கழிவுப் பொருட்கள் மற்றும் அவை அடங்கிய உபகரணங்களை சுற்றாலுக்கு நன்மை பயக்கக்கூடிய விதத்தில் முகாமைத்துவம் செய்தல் மற்றும் வெளிப்படுத்தும் செயற்திட்டத்தின் திட்டமிட்டுள்ள செயற்பாடுகளில் 04 செயற்பாடுகள் மீளாய்வாண்டின் போது பூர்த்தி செய்திருக்கவில்லை.

(ஊ) இரசம் தொடர்பாக மினமாடா உடன்படிக்கையை பின்பற்றுவதற்கான பிண்ணணியை கட்டியெழுப்பும் செயற்திட்டத்திற்காக தேறிய ஏற்பாடுகள் ரூபா 3.97 மில்லியன் தொகையாக காணப்பட்டதுடன் உண்மைச் செலவு ரூபா 1.79 மில்லியன் ஆகக் காணப்பட்டது. அதன் பிரகாரம் குறைபயன்பாடு 55 சதவீதமாகக் காணப்பட்டது. இச் செயற்திட்டத்தின் 2017 ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் பாடசாலைகள், தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களுக்காக

ஆய்வுகூட வழிகாட்டல்களை அச்சிடுவதற்காக திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அவற்றை நிறைவேற்றி இருக்கவில்லை.

(எ) மீளாய்வாண்டு இறுதி அளவில் உமாஓயா பல்கரும அபிவிருத்தி செயற்திட்டத்தின் மொத்த செலவு ரூபா 62,060.31 மில்லியனாக காணப்பட்டதுடன் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் மற்றும் திடீரென்று ஏற்பட்ட நீர் ஒழுகுதலின் காரணமாக பொதுமக்கள் பல்வேறு கஷ்டங்களுக்கு ஆளாகினார்கள். அதற்காக உள்நாட்டு நிதியத்தில் இருந்து மீளாய்வாண்டின் போது ரூபா 896.72 மில்லியன் தொகை அம் மக்களுக்கு செலுத்தியிருந்த போதிலும் அதில் ரூபா 744.54 மில்லியன் தொகை ஒன்று மாத்திரம் ஒப்பந்தக்காரரிடம் அறவிடப்பட்டிருந்தது.

(ஏ) 2011 ஏப்ரல் 21 ஆம் திகதிய MOFP/ERP/2011/1 இலக்கங் கொண்ட நிதி அமைச்சுக் செயலாளரின் வெளிநாட்டு மூலவள சுற்றோட்டத்தை ஒன்றுதிரட்டும் சுற்றறிக்கையின் பிரகாரம் நேரடி வெளிநாட்டுதவி வழங்கும் நன்கொடை வழங்கும் நிறுவனத்துடன் நேரடியாக கொடுக்கல் வாங்கல்கள் செய்வதற்கு எந்த அரச நிறுவனத்திற்கும் அதிகார் காணப்படவில்லை. அதே போல் அரச அபிவிருத்தி முக்கியத்துவத்தின் அடிப்படையில் தேசிய பாதீட்டின் மூலம் நிதியளிப்பு செய்யப்படாத வகையில் நன்கொடையளிப்பு வெளிநாட்டு உதவிகளை பெற்றுக்கொள்ளக் கூடாது. எவ்வாறாயினும், கீழ்வரும் செயற்திட்டங்கள் நேரடி நிதி உதவியின் கீழ் செயற்படுத்தப்படுகின்றன என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| செயற்திட்டத்தின் பெயர் | நன்கொடை வழங்கும் நிறுவனம் | ஒட்டுமொத்த செயற்திட்டத்தின் தொகை | எதிர்பார்க்கப்பட்ட காலம் |
|---|---|---|---|
| Implementation of the National Bio safety framework in accordance with Cartagena Protocol | GEF/FAO | USD 5,324,291 | 2017-2020 |
| Boidiversity Finance Initiative | GEF/UNDP | USD 530,000 | 2016-2018 |
| 6th National Report | GEF/UNDP | USD 4,112,402 | 2017-2018 |
| SWITCH – Asia Sustainable Consumption & Production National Policy Support componenet | EU | EURO 1,867,500 | 2015-2019 |

## 2.5 பெறுகை செய்முறையை செயற்படுத்துதல்

அமைச்சினால் 2017 ஆண்டிற்கான பெறுகை திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை. அதே போல் பெருந்தொகையான வெளிநாட்டுதவிச் செயற்திட்டங்கள் மற்றும் பல்வேறு பிரிவுகளைக் கொண்ட இந்த அமைச்சுக்கான பெறுகை கிளை ஒன்று அல்லது பிரிவு ஒன்று நிறுவுவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. ஒவ்வொரு செயற்திட்டத்திற்குமான தேவைகள் அவ்வவ் பிரிவுகளின் மூலமும் சில கொள்வனவுகள் கணக்குப் பிரிவின் மூலமும், பராமரிப்பு மற்றும் வாகன திருத் வேலைகள் போக்குவரத்து பிரிவினாலும் மேற்கொள்ளப்பட்டிருந்தது. மதிப்பீடுகளைப் பெற்றுக்கொள்ளல், கூறுவிலைகள் அழைத்தல், வழங்கல்கள் அல்லது சேவைகள் பெற்றுக்கொள்ளல் அவ்அவ் பிரிவுகளின் பங்குபற்றலுடன் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் காரணமாக பெறுகை வழிகாட்டலுக்கு முரணாக செயற்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் காணப்பட்டதுடன் பண்டங்கள் பெற்றுக்கொள்ளல் மற்றும் வழங்கல்கள் அனைத்தும் களஞ்சியத்தின் ஊடாக நடைபெற்றிருக்காத சந்தர்ப்பங்கள் காணப்பட்டன என அவதானிக்கப்பட்டது.

**2.6 சொத்துக்கள் முகாமைத்துவம்**

அமைச்சின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

**(அ) சொத்துக்களை ஆவணப்படுத்துதல்**

2002 நவம்பர் 28 ஆம் திகதிய ஐஏஐ/2002/02 இலக்கங் கொண்ட திறைசேரி சுற்றறிக்கையின் பிரகாரம் கணினிகள், துணைக் கருவிகள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) விளைவற்ற மற்றும் குறை பயன்பாட்டு சொத்துக்கள்**

பழுதுபார்த்தல் மேற்கொள்ளப்பட்டு பயன்படுத்தக் கூடிய நிலைமையில் காணப்பட்ட 08 வாகனங்களை பழுதுபார்ப்பதற்காக நடவடிக்கை எடுக்காமல் 06 வருடங்களை விட மிகையான காலம் விளைவற்றுக் காணப்பட்டது.

**(இ) வெளிசாராருக்கு வழங்கியிருந்த சொத்துக்கள்**

அமைச்சுக்கு சொந்தமான ரூபா 5.80 மில்லியன் மற்றும் ரூபா 19.90 மில்லியன் பெறுமதியான 02 வாகனங்கள் மத்திய பொறியியல் உசாத்துணை பணியகத்திற்கு மற்றும் அதன் இராஜாங்க அமைச்சருக்கு முறையாக சாட்டுதல் செய்யாமல் வழங்கப்பட்டிருந்தது.

**(ஈ) வேறு நிறுவனங்களுக்கு சொந்தமான சொத்துக்களை முறை சாரா விதமாக பயன்படுத்துதல்**

07 வேறு நிறுவனங்களுக்குச் சொந்தமான 20 வாகனங்களை முறையாக உரித்தாக்காமல் அமைச்சினால் பயன்படுத்தப்பட்டிருந்தது.

**2.7 ஈடுபாட்டுப் பொறுப்புக்கள் மற்றும் பொறுப்புக்கள்**

**வருடாந்த பாதீட்டு வரையறைகளை மிகைத்து ஈடுபாட்டு பொறுப்புக்களை அனுகுதல்**

2017 ஏப்ரல் 27 திகதிய 255/2017 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையில் 02(அ) பந்திக்கு இணங்காமல் 10 செலவு விடயங்களுக்காக ஒதுக்கியிருந்த ரூபா 1.16 மில்லியன் ஏற்பாடுகள் ரூபா 5.01 மில்லியனினால் மிகைத்து ரூபா 3.85 மில்லியனுக்கான ஈடுபாட்டு பொறுப்பு ஒன்றினை ஏற்படுத்திக் கொண்டிருந்தது.

**2.8 தீர்க்கப்படாதிருந்த கணக்காய்வு பந்திகள்**

அமைச்சிற்கான 2016 கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் 5.7 பந்தியில் குறிப்பிட்டிருந்த 121 வெற்றிடங்களை நிரப்புவதற்காக மீளாய்வாண்டிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 2.9 முகாமைத்துவப் பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 ஜூன் மாதத்தின் அமைச்சரவை தீர்மானம் ஒன்றின் பிரகாரம் தேசிய மலர் தொடர்பாக அமைச்சின் கீழ் காணப்படும் நிறுவனங்கள் மற்றும் ஏனைய அரச நிறுவனங்களை விழிப்பூட்டுவதற்காக போதியளவு விளம்பரம் ஒன்றினை பெற்றுக்கொடுப்பதற்கு எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு இரண்டு வருடங்கள் கடந்திருந்த போதிலும் அவ்வாறு செய்யப்படுவதற்காக அமைச்சுக்கு முடியாதிருந்தது.

(ஆ) விவசாய மக்களை காலநிலை மாற்றங்களின் பிரதிகூலமான தாக்கங்களுக்காக பழக்கப்படுத்துவதற்கான செயற்திட்டத்தின் மூலம் 2017 ஆண்டின் போது 14 சிறு குளங்களை புனர்நிர்மாணம் செய்வதற்காக கமநல சேவைத் திணைக்களத்துடன் உடன்படிக்கை ஒன்று மேற்கொண்டிருந்ததுடன் 03 மாதங்களுக்குள் புனர்நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்ய வேண்டியிருந்தது. எனினும் அக் காலப்பகுதியில் செயற்திட்டத்தின் மூலம் குளம் ஏதும் புனர்நிர்மாணம் செய்வதற்கு முடியாதிருந்தது.

(இ) இரசம் தொடர்பான மினமாடா உடன்டிக்கையை பின்பற்றுவதற்கான செயற்திட்டத்தின் மூலம் 2017 செயல் நடவடிக்கை திட்டத்திற்கு பாடசாலைகள், தொழிநுட்ப கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களுக்காக ஆய்வு கூட வழிகாட்டல் அச்சிடுவதற்காக திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அச் செயற்பாடு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(ஈ) அமைச்சின் கொள்கை திட்டமிடல் மற்றும் ஒழுங்குபடுத்தல் பிரிவின் 12 உத்தியோகத்தர்கள் கடமையாற்றிய போதிலும் வருடாந்த திட்டத்திற்கு இணங்க ஒவ்வொரு பிரிவினாலும் சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கைகளின் பிழையற்ற தன்மை தொடர்பாக முறையான மதிப்பாய்வு ஒன்று இன்றி அவ்வாறே சமர்ப்பிக்கப்படுவதினால் எதிர்பார்க்கும் குறிக்கோள்கள் உரிய முறையில் நிறைவேற்றப்படுவதில்லை எனவும், இது தொடர்பாக கரிசனை காட்டும் தரப்பினருக்கு தகவல்கள் பெற்றுக்கொள்ளும் போது பொய்யான தகவல்கள் பெறப்படுவதனால் செயலாற்றுகை தொடர்பாக பிழையற்ற ஒழுங்குபடுத்தலுக்கு அணுக முடியாது என அவதானிக்கப்பட்டது.

(உ) கண்டி நகரில் பிரதிகூலமான வாயுக்களின் இணைவு நியமச் செறிவு விட கூடிய பெறுமதியினை கொண்டிருப்பதாக ஆய்வு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த காரணத்தினால் வாயு வள முகாமைத்துவ மற்றும் ஓஸோன் அலகு தொடர்புடைய அனைத்து தரப்பினரினதும் பங்களிப்புடன் வாயு வள முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2017 ஆண்டின் போது ஒரு கலந்துரையாடல் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது. இதற்காக பொதுமக்கள் மற்றும் வளவாளர்களின் கருத்துக்களை பெற்றுக்கொள்வதற்கான செய்தித்தாள் அறிவித்தல் பிரசுரிப்பதற்காக ரூபா 110,658 இற்கான கிரயமொன்று மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் நிகழ்ச்சித் திட்டத்தை தொடர்ந்து எடுத்துச் செல்வதற்கு முடியாமையினால் அச்செலவு பயனற்ற செலவு ஒன்றாகியிருந்தது.

(ஊ) சுற்றாடல் பெருந்தெருக்கல் செயற்திட்டத்தின் பிரகாரம் தெரிவு செய்யப்பட்ட மாகாணங்களில் சுற்றாடல் பெருந்தெருக்கள் ஏற்படுத்துவதற்கு அமைச்சினை மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளருக்கு மீளாய்வாண்டின் போது விடுவிக்கப்பட்டிருந்த ரூபா 05 மில்லியனிற்கான ஏற்பாடுகளில் ரூபா 20,000 தொகை மாத்திரம் செலவிடப்பட்டிருந்ததுடன் வருட இறுதியை அண்மித்த போது இந்த ஏற்பாடுகள் விடுவிக்கப்படுகின்றமையினால் எதிர்பார்த்த செயற்பாடுகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு முடியாதிருந்தது.

(எ) சுற்றாடல் முறைமை பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ செயற்திட்டத்தினால் வனப் பாதுகாப்பு திணைக்களத்தில் மாநாடு ஒன்று நடாத்துவதற்காக ரூபா 5,555,270 தொகை செயற்திட்டம் நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது.

(ஏ) சுற்றாடல் முறைமை மற்றும் முகாமைத்துவம் செயற்திட்டத்தினால் மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்திருந்த ரூபா 1,828,358 தொகை பெறுமதியான எம்எஸ் ஓபீஸ் (Ms office) 52 மென்பொருட்கள் நிதிக்கூற்றுக்களில் நிலையான சொத்துக்கள் என அல்லாது செலவுகள் எனக் காட்டப்பட்டிருந்தது.

(ஐ) உமாஓயா பல்கரும அபிவிருத்திச் செயற்திட்டத்தின் பின்வரும் முகாமைத்துவப் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) பாரிய மஹாவலித் திட்டத்திலிருந்து விலக செயற்திட்டத்தை செயற்படுத்துதல், செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்கு முன்னர் சாத்தியக்கூறு ஆய்வு மற்றும் சுற்றாடல் ஆய்வு மேற்கொள்ளப்பட்டிருக்காமை மற்றும் ஒப்பந்தக்காரருக்கு இணங்கியிருந்த வசதிகளை போலவே இந்த சிக்கல்களுக்கு தீர்ப்புக்கள் காலத்துக்கு காலம் வழங்கியிருக்காமை இந்த செயற்திட்டத்தின் தற்போதைய சிக்கல்சார் நிலைமைக்கு காரணமாகியிருந்தது.

(ii) பிரேரணை அல்லது கோரிக்கை இன்றிய (Unsolicited) அடிப்படையில் ஒப்பந்தக்காரர் தெரிவு செய்யப்படுதல் வெளிப்படையான தன்மை இன்றி மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(iii) அபிவிருத்தி அலுவல்களுக்காக அரச கைப்பற்றப்பட்ட காணிகளுக்கு நட்டஈடு செலுத்தும் போது காணியில் மேற்கொள்ளப்பட்டிருந்த அபிவிருத்தி வேலைகளின் பெறுமதி தொடர்பாக செலுத்தப்பட்டிருந்த மேலதிக கொடுப்பனவுகள், தாபித்தல் கொடுப்பனவுக்கான வட்டித்தொகை செலுத்த முடியாத போதிலும் வெல்லவாய பிரதேச செயலகத்தினால் உமாஓயா செயற்திட்டத்திற்காக உரித்தாக்கப்பட்ட காணிகளுக்காக ரூபா 4,620,420 இற்கான வட்டித் தொகையொன்று மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(iv) உமா ஓயா பல்கரும அபிவிருத்திச் செயற்திட்டத்திற்காக காணிகள் உரித்தாக்கும் போது 602,603,609 ஆம் இலக்கங் கொண்ட துண்டுகளுக்காக ரூபா 850,000 இற்கான தொகை மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது.

**2.10 கடமைகளை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தினால் வழங்கப்பட்டிருந்த ஏற்பாடுகளை பயன்படுத்துதல்**

2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த 05 வருட காலப்பகுதியில் அமைச்சுக்கு வழங்கப்பட்டிருந்த நிதி ஏற்பாடுகள், பயன்படுத்துதல் மற்றும் சேமிப்பு தொடர்பாக தகவல்கள் மற்றும் அவை தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| ஆண்டு | செலவின வகை | தேறிய ஏற்பாடு | பயன்படுத்தல் | சேமிப்பு | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | |
| 2013 | மீண்டுவரும் | 633 | 599 | 34 | 5.37 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | மூலதன | 1,478 | 761 | 717 | 48.51 |
| | **மொத்தம்** | **2,111** | **1,360** | **751** | **35.57** |
| 2014 | மீண்டுவரும் | 787 | 771 | 16 | 2.03 |
| | மூலதன | 1,862 | 1,093 | 769 | 41.30 |
| | **மொத்தம்** | **2,649** | **1,864** | **785** | **29.63** |
| 2015 | மீண்டுவரும் | 816 | 801 | 15 | 1.84 |
| | மூலதன | 35,071 | 27,920 | 7,151 | 20.39 |
| | **மொத்தம்** | **35,887** | **28,721** | **7,166** | **19.97** |
| 2016 | மீண்டுவரும் | 3,776 | 3,758 | 18 | 0.47 |
| | மூலதன | 61,771 | 38,557 | 23,214 | 37.58 |
| | **மொத்தம்** | **65,547** | **42,315** | **23,232** | **35.44** |
| 2017 | மீண்டுவரும் | 3,717 | 3,668 | 49 | 1.32 |
| | மூலதன | 50,796 | 39,154 | 11,642 | 22.92 |
| | **மொத்தம்** | **54,513** | **42,822** | **11,691** | **21.45** |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) கருமங்களை நிறைவேற்றுவதற்கு திட்டமிட்டுள்ள காலசட்டகம் தொடர்பாக கவனம் செலுத்தாமல் ஏற்பாடுகளை ஒதுக்கிக் கொள்ளுதல்**

அமைச்சினால் கருமங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக மொத்தக் கிரய மதிப்பீட்டின் பிரகாரம் தேவையான மொத்த ஏற்பாடுகளும் ஒதுக்கி இருந்த போதிலும், மீளாய்வாண்டு இறுதி அளவில் சாத்தியக்கூறு அறிக்கைகள் மற்றும் பெறுகை நடைமுறைக்கு உரிய கருமங்கள் நிறைவேற்றப்பட்ட பின்னர் மொத்த ஏற்பாடுகளையும் பயன்படுத்துவதற்கு முடியாதிருந்ததினால் ஒதுக்கப்பட்ட மொத்த ஏற்பாடுகளில் ரூபா 3,387,741,258 தொகை எனப்படும் 30 சதவீதம் முதல் 99 சதவீதத்திற்கு இடைப்பட்ட வீச்சில் ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தது.

**(ஆ) ஒதுக்கீட்டுக் கணக்கு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ஏற்பாடுகளின் தேவையினை உரிய முறையில் இனங்காணாம் செலவு விடயங்களிடையே ஏற்பாடுகள் மாற்றப்பட்டிருந்தமையால் 06 மூலதன செலவு விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்த ரூபா 2,503 மில்லியனிற்கான ஏற்பாடுகளில் ரூபா 1,060 மில்லியன் தொகை எனப்படும் 28 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான வீச்சில் ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தது.

(ii) குறைநிரப்பு மதிப்பீடுகளில் 100 சதவீதம் சேமிப்புக்களில் குப்பை முகாமைத்துவத்திற்காக கம்பஹா மாவட்டத்தில் நிலத்தின் கீழ் குப்பை குவிக்கும் இடம் ஒன்று நிர்மாணிப்பதற்காக கிடைத்திருந்த ரூபா 10 மில்லியனிற்கான குறைநிரப்பு ஏற்பாடுகள் திறைசேரியினால் முடக்கி இருந்ததாக சேமிப்புக்கான காரணமாக குறிப்பிட்டிருந்த போதிலும் ஏற்றுக்கொள்ளக் கூடிய எழுத்துமூல சான்று ஒன்று கணக்காய்விற்காக சமர்ப்பித்திருக்கவில்லை.

(iii) மீளாய்வாண்டின் போது மூலதன செலவுகளுக்காக பெற்றுக்கொள்ளப்பட் குறைநிரப்பு ஏற்பாடுகளில்இருந்து இரண்டு செலவு விடயங்களுக்காக பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா

10.33 மில்லியன் மொத்த ஏற்பாடுகளும் வேறு 02 செலவு விடயங்களுக்காக பெறப்பட்ட குறைநிரப்பு ஏற்பாடுகள் ரூபா 102.3 மில்லியனில் 66 சதவீதம் முதல் 94 சதவீதம் வரை தொகையொன்றும் சேமிக்கப்பட்டிருந்தது.

### 2.11 கட்டுநிதிக் கணக்கு

அமைச்சின் கீழ் காணப்பட்ட 01 கட்டுநிதிக் கணக்கின் 2017 திசெம்பர் 31 திகதி அளவில் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 0.26 மில்லியன் தொகையாக காணப்பட்டது. அமைச்சினால் பேணப்பட்டிருந்த கட்டுநிதிக் கணக்கு தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அனுப்பப்பட்ட ஆனால் திறைசேரியின் ஏடுகளில் 2017 திசெம்பர் 31 உள்ளவாறு காணப்படாத காசுமீதி மற்றும் தீர்க்கப்படாத துணைக் கட்டுநிதிகளின் கூட்டுத்தொகை முறையே ரூபா 53.60 மில்லியன் மற்றும் ரூபா 261,361 ஆகும்.

(ஆ) 2015 ஜுலை 14 ஆம் திகதிய 03/2015 ஆம் இலக்க பொது நிதி சுற்றறிக்கையினால் திருத்தப்பட்ட நிதிப்பிரமாணம் 371(2) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு முரணாக 114 பதவிநிலை அல்லாத உத்தியோகத்தர்களுக்கு 478 சந்தர்ப்பங்களில் கூட்டுத்தொகை ரூபா 8.38 இன் நிமித்த துணைக் கட்டுநிதிகள் செலுத்தப்பட்டிருந்தது.

(இ) மேற்குறிப்பிட்ட சுற்றறிக்கையின் மூலம் திருத்தப்பட்ட நிதிப்பிரமாணம் 371(5) இன் பிரகாரம் கருமம் முடிவடைந்து 10 நாட்களுக்குள் பெற்றிருந்த நிமித்தத் துணைக் கட்டுநிதி தீர்க்கப்பட வேண்டுமெனவும் 24 சந்தர்ப்பங்கள் தொடர்பாக வழங்கியிருந்த ரூபா 742,289 தொகைக்கான நிமித்த கட்டுநிதி விடயம் முடிவடைந்த 01 மாதம் முதல் 11 மாதங்கள் வரையான காலவீச்சிற்கான தாமதத்தில் அந்த கட்டுநிதி தீர்க்கப்பட்டிருந்தது.

### 2.12 பொது வைப்புக் கணக்கு

அமைச்சின் கீழ் உள்ள 02 பொது வைப்புக் கணக்குகளில் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மீதிகளின் கூட்டுததொகை ரூப 56.88 மில்லியனாகும். இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிப் பிரமாணம் 571(2) இன் பிரகாரம் வைப்புக்கள் அரச வருமானத்திற்கு செலவு வைத்த பின்னர் திருப்பி பெறுவதற்கான கோரிக்கை விடுத்தல்கள் முடிந்த அளவு தவிர்த்து கொள்ளும் நோக்கில் அந்த வைப்புக்களை அரச வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு முன்னர் வினவப்பட வேண்டும். அமைச்சினால் வைப்புக்கள் அரசாங்க வருமானத்திற்கு செலவு வைத்திருந்த போதிலும் அவ்வாறு முன் வினவுதல் நடைபெற்று தகவல்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்படவில்லை.

(ஆ) அமைச்சினால் செலுத்தப்பட வேண்டியிருந்த ரூபா 69,431 இற்கான 06 காசோலைகள் தொடர்பாக நிதிப்பரமாணம் 396 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 2.13 வங்கிக் கணக்குகள் நெறிப்படுத்தல்

வங்கிக் கணக்கொன்று தொடர்பாக 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு தயாரிக்கப்பட்டிருந்த வங்கி இணக்கக் கூற்றின் பிரகாரம் ரூபா 3,396,150 இற்கான இனங்காணப்படாத பெறுவனவுகளை 2018 ஏப்பரல் 17 திகதி அளவிலும் இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 2.14 இணங்காமைகள்

### சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காட்டப்பட்டுள்ளது.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| | ரூபா. | |
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | |
| (அ) நிதிப்பிரமாணம் 104 | - | 04 சந்தர்ப்பங்களில் ஏற்பட்டிருந்த வாகன விபத்துக்கள் தொடர்பாக உரிய காப்புறுதி நிறுவனத்தில் இருந்து இழப்பீடு பெறப்பட்டிருந்தது. எனினும் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நட்டம் தொடர்பாக முழுமையான அறிக்கை தயாரித்திருக்கவில்லை. |
| (ஆ) நிதிப்பிரமாணம் 215(1) மற்றும் (3) | 2,301,125 | 2017 திசெம்பர் 30 திகதி அளவில் அமைச்சுக்கு கிடைத்திருக்காத 04 வகையான புத்தகங்களுக்காக ரூபா 2,301,125 இற்கான தொகையொன்று (இரண்டு தனியார் அச்சகங்களுக்கு) 04 காசோலைகளின் மூலம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. |
| (இ) நிதிப்பிரமாணம் 751 | -- | (i)அமைச்சின் அனைத்து பெறுவனவு களும் கலஞ்சியத்தின் ஊடாக நடைபெற்றிருக்கவில்லை. அத்து டன் பல்வேறு பகுதிகளின் கூறு விலை அழைக்கப்பட்டு அச்சிட ப்பட்ட புத்தகங்கள், பிரசுரங்கள் மற்றும் ஏனைய உபகரணங்கள் கொள்வனவு செய்தல் மற்றும் வழங்குதல் களஞ்சிய இருப்பு புத்தகத்தில் பதிவு செய்திருக்கவில்லை. |

(ii) சுற்றாடல் முறைமையை பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ செயற்திட்டத்தில் பண்டப் பதிவேடு நாளது வரை ஆக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) நிதிப்பிரமாணம் 753(1) -- பண்டங்கள் வழங்கும் போது பொது 141 படிவத்தில் தயாரித்து முதல் பிரதியை பண்டம் அனுப்பும் உத்தியோகத்தருக்கும் இரண்டாம் பிரதி களஞ்சியத்தின் பொறுப்பில் வைத்திருக்க வேண்டுமெனினும் வழங்குவதாக பொது 141 படிவம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. அதே போல் பழைய அமைச்சு அலுவலகத்தில் காணப்பட்ட பொருட்பதிவேட்டு பண்டங்கள் பல்வேறு அரச நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டதென குறிப்பிட்டிருந்த போதிலும் அந்த வழங்கல்களுக்காக பொது 141 படிவம் வழங்கியிருக்கவில்லை.

(உ) நிதிப்பிரமாணம் 753(2) - பண்டங்கள் கிடைத்த போது அந்த பண்டங்களை பெற்றுக்கொள்ளும் அலுவலரினால் பொதுப்படிவம் 219 இரண்டாம் பிரதிகளுடன் தயாரிக்கப்பட்டு முதல் பிரதி (கொடுப்பனவு உறுதிச்சீட்டிற்கு) வழங்கிய உத்தியோகத்தருக்கு அனுப்பி இரண்டாவது பிரதி தன்னிடம் வைத்திருக்க வேண்டுமெனினும் நிதிப் பிரிவுக்கு வெளியே கொள்வனவு செய்யப்பட்ட சந்தர்ப்பங்களில் படிவம் 219 எழுதியிருக்கவில்லை.

(ஊ) நிதிப்பிரமாணம் 754 - எல்லா பண்டங்களின் பெறுவனவுகள் வழங்குதல்கள் உரிய விதத்தில் கணக்கீடு செய்யப்பட வேண்டுமெனினும பண்டங்கள் பெறுதல் வழங்குதல்களை உரிய முறையில் உட்படுத்தி பொருட் பதிவேட்டில் சமப்படுத்தி நாளது வரை பேணப்பட வேண்டுமெனினும் அவ்வாறு செய்யாதிருந்த 05 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(எ) நிதிப்பிரமாணம் 757 - வருடாந்த பண்டக் கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டுமெனினும்,

| | | | |
|---|---|---|---|
| | | | அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ஏ) | பெறுகை வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் 4.2 | - | சுற்றாடல் முறைமை பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ செயற்திட்டத் தின் முறையான பெறுகைத் திட்டமொன்று மீளாய்வாண்டிற்காக தயாரித்திருக்கவில்லை. |
| (ஒ) | 2015 ஜூலை 10 திகதிய 02/2015 இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை | - | அகற்றுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அமைச்சினால் ஓட்ட நிலையிலிருந்து அகற்றியிருந்த 4 வாகனங்கள் 2 முதல் 11 வருட காலப்பகுதியில் பழுதுபார்த்து பயன்படுத்துவதற்கு அல்லது அகற்றுவதற்காக நடவடிக்கை எடுக்காமல் உக்குவதற்கு கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்டது. |
| (ஓ) | 2007 பெப்ரவரி 28 திகதிய சீஎஸ்ஏ/பீ1/40 ஆம் இலக்க அரச செலவுகள் முகாமைத் துவச் சுற்றறிக்கை மற்றும் 2015 செப்டம்பர் 25 ஆம் திகதிய எஸ்பீ/07/15 ஆம் இலக்க ஜனாதிபதி செயலாளரின் சுற்றறிக்கை | 384,681 | விழாக்கள், மாநாடுகள், செயலமர்வுகள் நடாத்துவதற்காக தனியார் ஹோட்டல்களை தெரிவு செய்யக் கூடாது என குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் அதற்கு புறம்பாக இலங்கையில் பொலிக்லோரினேட் பைபினைல் மூலப் பொருட்கள் மற்றும் அவை அடங்கியுள்ள உபகரணங்களை சுற்றாடலை ஆதரிக்கும் முகாமைத்துவம் மற்றும் வெளியே அனுப்பும் செயற்திட்டத்தினால் தனியார் ஹோட்டல்களுக்கு செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஔ) | 2016 ஜூன் 10 திகதிய 02/2016 இலக்கம் கொண்ட முகாமைத்துவக் கணக்காய்வு சுற்றறிக்கை | - | 10 மில்லியன் அமெரிக்க டொலர்கள் அல்லது அதனை மிகைத்த செயற்திட்டங்களுக்காக பூர்வாங்க செயற்திட்ட மதிப்பாய்வு, செய்யும் கட்டத்தில் உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவர் செயற்திட்ட பதவியணியில் உட்படுத்தப்பட வேண்டும். எனினும், 2018 ஜூலை 13 திகதி அளவிலும் சுற்றாடல் முறைமை பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவச் செயற்திட்டத்தின் உள்ளகக் கணக்காய்வாளர் பதவி வெற்றிடமாகக் காணப்பட்டது. |

**2.15 உள்ளகக் கணக்காய்வு**

கணக்கீட்டு உத்தியோகத்தர்களினால் தமது திணைக்களங்களில் நிதிப்பிரமாணம் 128 இல் குறிப்பிட்டுள்ளவாறு தனது கடமைகளை மற்றும் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக தமது திணைக்களங்களில் உள்ளகக் கணக்காய்வு அலகு நிறுவப்பட வேண்டுமென நிதிப்பிரமாணம் 133 இன் மூலம் அழுத்தல் செய்யப்பட்டிருந்தது. அமைச்சின் உள்ளகக் கணக்காய்வு அலகு ஒன்று நிறுவப்பட்டிருந்த போதிலும் போதியளவு பதவியணியினர் அதற்காக இணைக்கப்பட்டிருக்கவில்லை.

**2.16 மனிதவள முகாமைத்துவம்**

**2.16.1 இணைக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணி மற்றும் ஆளணி வேதனங்களுக்கான செலவினம்**

அமைச்சின் செயலாற்றலை நிறைவேற்றுவதற்காக 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட, உள்ளபடியான மற்றும் வெற்றிடமான மற்றும் மிகையான பதவியணிகள் தொடர்பான விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன. மீளாய்வாண்டிற்காக அமைச்சினால் ஆளுக்குரிய வேதன செலவினத் தொகுதிக்காக ரூபா 199.95 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஒரு ஆளுக்கான செலவு ரூபா 649.182 தொகை ஆக இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 92 | 54 | 38 |
| (ii) | மூன்றாம் நிலை | 36 | 15 | 21 |
| (iii) | இரண்டாம் நிலை | 200 | 150 | 50 |
| (iv) | ஆரம்ப நிலை | 102 | 87 | 15 |
| (v) | அமைய/ஒப்பந்த | 02 | 02 | - |
| | மொத்தம் | 432 | 308 | 124 |

**2.17 அரச உத்தியோகத்தர்கள் பிணை வைத்தல்**

நிதிப்பிரமாணம் 880 இன் பிரகாரம் அரசாங்க பணம், வருமானம், முத்திரைகள் அல்லது பொருட்களை பெற்றுக்கொள்ளல் அல்லது பொறுப்பாக இருத்தல். அவ்வாறின்றேல் அரச பணத்தை வினியோகித்தல் அல்லது முத்திரை அல்லது பொருட்கள் வினியோகித்தல் தொடர்பாக நிருவாக ரீதியாக பொறுப்புச் செல்ல வேண்டிய அல்லது அதிகாரம் அளிக்கப்பட்டதன் கீழ் அவ் அலுவல்களை சாட்டப்பட்டுள்ள உத்தியோகத்தர்களும், அரச கணக்கு தொடர்பான உறுதிச்சீட்டுக்கள் சான்றுபடுத்தும் காசோலைகள் கையொப்பமிடுபவர்களும், தனது கடமை அலுவல்களை நேர்மையுடன் நிறைவேற்றுவதாகவும் 612 அதிகாரம் ஆகிய அரச ஊழியர்கள் பிணை கட்டளை சட்டத்திற்கு இணங்க பிணை வைக்க வேண்டும். எவ்வாறாயினும், அமைச்சின் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பாக அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை.